தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2043, பங்குனி 28

2012 ஏப்ரல் 10, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதுஒன்று இல்."

உயர்ந்த புகழ் அல்லாமல் உலகத்தில் ஒப்பற்ற ஒரு பொருளாக அழியாமல் நிலைநிற்க வல்லது வேறொன்றும் இல்லை.

1. வினாக்கள்—விடைகள்

உறுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 61, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பார்த்தசாரதி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

61—

மின் கம்பி வடங்கள்

***4972—திரு. ப. பார்த்தசாரதி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருகம்பாக்கம் தொகுதி, எம்.ஜி.ஆர். நகர், சூளைப்பள்ளம் பகுதியிலுள்ள மின் கம்பிகளை மாற்றி பூமிக்கடியில் புதைவடங்களாகப் பதிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தமிழ்நாடு மின்சார வாரிய உத்தரவின்படி மின் கம்பிகளைப் புதைவடமாக மாற்றுவதற்கான திட்டங்களுக்கு, அப்பகுதியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர் அல்லது சட்டமன்ற உறுப்பினர் அல்லது உள்ளாட்சி அமைப்பு, அதற்குரிய திட்ட மதிப்பீட்டில் 50 சதவிகித செலவுத் தொகையை செலுத்தும்பட்சத்தில் புதைவடமாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பார்த்தசாரதி அவர்கள்.*

திரு. ப. பார்த்தசாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விருகம்பாக்கம் தொகுதியில் 137–வது வட்டத்தின் சார்பாக நாச்சியாபுரம், சுரேந்திரன் தெரு, ராஜீவ் காந்தி தெரு, ஔவையார் தெரு, நேரு தெரு, கண்ணகி தெரு, பாரதியார் தெரு, நிஷா ஆதிராம் தெரு, புகழேந்தி தெரு, சேக்கிழார் தெரு ஆகிய பகுதிகளில் சுமார் 5,000 மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். தினமும் அந்தப் பகுதியிலே நடந்து செல்லும்போது மேலே இருக்கிற கம்பியைப் பார்த்து பயந்து பயந்து நடக்கக்கூடிய சூழ்நிலை உருவாகி இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கின்றபோது, பாராளுமன்ற உறுப்பினரும், சட்டமன்ற உறுப்பினரும், உள்ளாட்சி அமைப்பும் மேற்படி திட்டத்திற்காகும் செலவில் 50 சதவிகிதம் நிதியை ஒதுக்கிக்கொடுத்தால் கண்டிப்பாக இந்தப் பணியை செய்து தருவேன் என்று சொல்லியிருக்கின்றார். கண்டிப்பாக என்னுடைய நிதியிலிருந்து என்ன தேவையோ அந்த நிதியை நான் தருகிறேன் என்று இந்த மன்றத்தின் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உங்களுடைய நிதி என்று சொன்னால் சொந்த நிதியா? சட்டமன்ற உறுப்பினர் நிதியா?*

திரு. ப. பார்த்தசாரதி: *சட்டமன்ற உறுப்பினர் நிதியைத்தான் சொல்கிறேன் நானும். அவரும் பாராளுமன்ற உறுப்பினர் நிதி*

2012 ஏப்ரல் 10]

என்று சொன்னார், சட்டமன்ற உறுப்பினர் நிதி என்றுதான் சொன்னார்கள். ** என்னுடைய நிதியிலிருந்து கண்டிப்பாக நான் தருகிறேன். அதேபோன்று . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரும்பவும் கேட்கிறேன், உங்களுடைய நிதியிலிருந்தா, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்தா?

திரு. ப. பார்த்தசாரதி: சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்துதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வருமா, வராதா? (சிரிப்பு)

திரு. ப. பார்த்தசாரதி: கண்டிப்பாக வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் அந்தக் கருத்தைச் சொன்னபோது, ** என்று அவர் சொன்ன அந்தக் கருத்து அவைக்குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த சட்டமன்ற உறுப்பினர், எந்த நாடாளுமன்ற உறுப்பினர், தன்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியைக் கொடுத்தாலும், அது மக்களுடைய பணம்தான். ஆகவே, என்னுடைய நிதி என்று சொல்வது பொருத்தமான வார்த்தையாக இருக்காது என்பதை மீண்டும் நினைவுபடுத்துகிறேன். ஆகவே, சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வழங்கப்படும் என்று சொல்வதுதான் பொருத்தமானதாக இருக்கும். அதேபோல, இங்கே நான் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர், உள்ளாட்சி அமைப்புகள் என்று சேர்த்துச் சொல்லவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர் அல்லது சட்டமன்ற உறுப்பினர் அல்லது உள்ளாட்சி அமைப்பு என்று தனித் தனியாகச் சொல்லி இருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, 3 பேரும் சேர்ந்து அதைக் கொடுக்க வேண்டும் என்பது போலவும், அதிலே என்னுடைய பங்காக நான் கொடுத்துவிடுகிறேன் என்பதைப் போலவும், அவருடைய பதில் அமைந்திருந்தது. அப்படி அல்ல. புதைவடமாக மின் கம்பிகளை மாற்றுவதற்கு விருப்பப்படுகின்ற சட்டமன்ற உறுப்பினர்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அதற்குரிய முழு மதிப்பீட்டுத் தொகையில் 50 சதவிகிதம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வழங்கினால், உடனடியாக எந்தெந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த நிதியை வழங்குகிறார்களோ, அந்தப் பகுதிகளிலே அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும். அதேபோல நாடாளுமன்ற உறுப்பினர்கள் வழங்கினாலும், அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும். இருவரும் அல்லாமல் உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து அதற்குரிய நிதியைக் கொடுத்தாலும் அங்கே அதற்குரிய பணிகள் மேற்கொள்ளப்படும். ஆனால், அதிலே ஒரே ஒரு திருத்தம். தண்ணீர் தேங்கக்கூடிய பள்ளமான பகுதியில் மட்டும் மின் கம்பிகளைப் புதைவடமாக மாற்றுவதற்கு இயலாது என்பதையும், தண்ணீர் தேங்காத பகுதிகளில் இந்தப் பணிகளை மேற்கொள்ள முடியும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10—05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பார்த்தசாரதி அவர்கள்.

திரு. ப. பார்த்தசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கும் இந்தச் சட்டமன்றத்திற்கு வருகை தந்து ஒரு வருடம் அனுபவம் இருக்கிறது. நான் பணம் கொடுக்கிறேன் என்றால், என்னுடைய பணத்திலிருந்து கொடுப்பதாக அர்த்தமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். அதோடு அந்த சப்ஜெக்ட் முடிந்துவிட்டது.

திரு. ப. பார்த்தசாரதி: அமைச்சர் அவர்கள் கேட்டதற்கு நானும் விளக்கம் சொல்ல வேண்டுமல்லவா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) Please sit down. (குறுக்கீடு) அந்த issue அப்போதே முடிந்துவிட்டது. அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போகாமல், திரும்பவும் அதையே எழுப்பிக் கொண்டிருந்தால் எப்படி? நான் time manage பண்ண வேண்டுமல்லவா?

வினா வரிசை எண் 62, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.